**தலைப்பு 205 – பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 205 – பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1 (ஆ) | நிதிப்பிரமானம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு ஒன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1.6.1(இ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| புத்த சாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் 2022 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட உரித்து கையேற்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்களுக்குரிய | 2023 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட இரண்டு வாகனங்களையும் பழுது பார்ப்பதற்கான செலவின மதிப்பீடு பெறப்பட்டிருந்த | திணைக்களத்திற்குரிய வாகனங்களின் பெறுமதி நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்குவதற்கும் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும் |

| | | |
|---|---|---|
| பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த இரண்டு மோட்டார் வாகனங்களையும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 406,270 செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | போதும் செலவினம் அதிகமாக இருந்தமையால் விற்றுத் தீர்ப்பதற்காக பரிந்துரை செய்யப்பட்டு குழுவினால் மதிப்பீட்டு அறிக்கையும் பெறப்பட்டிருந்ததுடன் கேள்வி கோரல் அல்லது அரசாங்கத்தின் ஏனைய திணைக்களங்களுக்கு கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டியஉ த்தியோதகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தை நடாத்திச் செல்கின்ற கட்டிடத்தை அபிவிருத்தி செய்யும் செலவினம், கட்டிட உரிமையாளரின் பொறுப்பில் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதற்காக வருடாந்த மதிப்பீட்டிலும் கட்டிடம் மற்றும் நிர்மாணம் (2001) இன் கீழ் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ரூபா 300,000 வீதம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டதன் காரணமாக 03 வருடங்களிலும் முறையே 40 சதவீதம், 63 சதவீதம் | பிரதான அலுவலகம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடம் முழுமையாக பழுது பார்க்கும் தேவை ஒன்று ஏற்பட்டமையினால் அதற்காக கணிசமான தொகை ஒன்றை செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டமையால் கட்டிடத்தை பழுதுபார்க்கும் செலவினம் உரிமையாளரின் பொறுப்பில் மேற்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் இந்த செலவின விடயத்திற்காக | இயலுமான வரை சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் 77 சதவீதம் ஆக தொடர்ச்சியாக சேமிப்பு காணப்பட்டது. | குறைத்து நிதியேற்பாடு மதிப்பீடு செய்வதற்கு குறிப்பிடுகின்றோம். | |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு உரித்தற்ற செலவின விடய இலக்கம் 205-126-2-7-35-2401-12-P இன் கீழ் ரூபா 949,560 பெறுமதியுடைய பொறுப்புக்கள், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு SA-92 திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக திறைசேரிக்கு அறிவித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த பொறுப்புக்கள் தலைப்பு இலக்கம் 126 (கல்வி அமைச்சு) இனால் தவறுதலாக எமது திணைக்களத்தின் தலைப்பு இலக்கம் ஆன 205 தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அது இறுதியாக திறைசேரி அச்சிடல் குறிப்பில் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டமையால் சரி செய்யுமாறு அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தாமதம் இன்றி திறைசேரிக்கு அறிவித்து திறைசேரி அச்சிடல் குறிப்பினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் , விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடன ான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1922 இன் 01 இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் 47(1) ஆம் பிரிவு | - | நம்பிக்கைப் பொறுப்பு / மரணச்சொத்துக் கணக்கு வருடாந்தம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் 2023 ஆம் ஆண்டிற்குரிய நம்பிக்கைப் பொறுப்பு / மரணச் சொத்துக்களின் இறுதிக் கணகுகள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நம்பிக்கைப் பொறுப்பு மரணச்சொத்து இறுதிக் கணக்கு தயாரிக்கப்படுவதுடன் விரைவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கணக்குகளை குறித்துரைத்த திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை | திணைக்களத்திற்குரிய 09 வாகனங்களுக்காக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இதற்குமுன் சகல வாகனங்களினதும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் உரிய கால எல்லையை விஞ்சியமையால் சகல வாகனங்களுக்காகவும் எதிர்காலத்தில் விரைவாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | எரிபொருள் பயன்பாடு தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நம்பிக்கைப் பொறுப்பு/மரணச்சொத்து தொடர்பாக 08 வங்கிக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 14,,017,724 வரவு மீதி ஒன்று ஏற்படுகின்ற வகையில் செலவினங்கள் செய்யப்பட்டிருந்ததுடன் அதில் நம்பிக்கைப் பொறுப்பு / 04 மரணச் சொத்துக்களுக்குரிய கூட்டு மொத்தமான ரூபா 1,325,481 வரவு மீதியை தீர்த்து வைப்பதற்காக அந்த சொத்துக்களில் எந்த ஒரு முதலீடும் காணப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். | ஒவ்வொரு நம்பிக்கைப் பொறுப்பும் / மரணச் சொத்துக்களுக்காகவும் கிடைக்கின்ற வருமான எல்லையில் செலவினங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 இன் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் விற்பனைக் கட்டணம் மற்றும் ஏனைய பெறுவனவாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 11,000,000 ஆக இருந்த போதிலம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 20,714,000 அதாவது | அவ்வப்போது வட்டி சதவீதம் மாற்றமடைந்தமை மற்றும் 2023 ஆம் ஆண்டில் இருந்து திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டமையினால் வட்டி வருமானம் அதிகரித்ததன் காரணமாக வருமானக் கட்டணம் | வருமான மதிப்பீட்டை சரியாக தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விட 188 சதவீதத்துக்கும் மேற்பட்ட பெறுமதியாகும். இது மதிப்பீடு தயாரித்தலின் நலிவினைக் காண்பித்தது. | அதிக அளவில் அறவிட முடியுமாக இருந்தது. | |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு / மரணச்சொத்துக்களின் நிதியங்களுக்கு உரிய செயற்பாடுகளுக்காக தனியார் நம்பிக்கை பொறுப்பு செலுத்துதல் ரூபா 14 மில்லியன் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நோக்கத்தின் பிரகாரம் ஏனைய கொடுப்பனவுகள் ரூபா 5.7 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் செலவிடல்கள் முறையே ரூபா 22.2 மில்லியன் மற்றும் ரூபா 9.8 மில்லியனாக இருந்தது. மதிப்பீடு தயாரித்தலின் நலிவு இதற்குக் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டினை விட மேற்பட்ட வருமானம் பெறப்பட்டதன் காரணமாக அதிக நலனாளிகளின் எண்ணிக்கைக்கு செலுத்தப்பட்டமையினால் உள்ளபடியான செலவினம் அதிகரித்திருந்தது. | திட்டங்களை தயாரிக்கும் போது கொடுப்பனவுகளுக்குரிய மதிப்பீடுகள் இயலுமானவரை சரியாகத் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் அதற்குரிய கொடுப்பனவுகள் மதிப்பீடு செய்யப்பட்ட எல்லையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்பெறாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தால் இனங்காணப்பட்ட செயலாற்றல் குறிகாட்டிகளின் பிரகாரம் உள்ளபடியான பூர்த்தி, எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி சதவீதத்தைக் கவனத்தில் கொள்ளும் போது தோட்ட முகாமைத்துவ பிரிவில் 07 மரணச்சொத்துக்களுக்கு உரிய 11 தோட்டங்களில் 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட இலாபம் ரூபா 19,581,285 ஆக இருந்த போதிலும் அவற்றில் ரூபா 5,008,264 நட்டம் | இழப்பீட்டை விடுவித்தல், கிடைக்கின்ற கோரிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. நட்டம் கிடைக்கின்ற தோட்டங்களை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் எதிர்காலத்தில் இந்த நிலைமை சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஏற்பட்டிருந்ததுடன் அதன் சதவீதம் எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தில் மறை 26 சதவீதமாக இருந்தது.

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்ளும் சாதனைகள் மற்றும் சவால்களை விரிவாக விபரிப்பதற்கும் மற்றும் நிறுவனத்தின் செயலாற்றலை நோக்காகக் கொண்டு மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகையினை தாக்கமளிக்கின்ற முறை தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் வில்லை. | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இணங்குகின்றோம். | செயலாற்றல் அறிக்கைக்குரிய படிவங்களின் பிரகாரம் முழுமையாக சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்தித்தாள் கம்பனியின் பங்குகளின் பங்குரிமை தன்மை அரசாங்கத்தின் சார்பாக அந்த கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பொறுப்பாக இருந்த போதிலும் அந்தப் பணிகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் செயலாற்றல் குறிகாட்டிகளாக இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் செயலாற்றல் குறிகாட்டிகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிப் பொறுப்பின் பிரகாரம் செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்படல் வேண்டும். |

## 3.4 நட்டம் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| வாகனம் ஒன்றிற்கு 2007 சனவரி 27 ஆந் திகதி ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக ரூபா 254,038 நட்டம் உரிய சாரதியிடம் இருந்து அறவிடுவதற்காக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையின் காரணமாக காலாவதியாகியதன் அடிப்படையில் செயலிழந்து காணப்பட்டதுடன் விபத்து ஏற்பட்டு 16 வருடங்கள் கடந்திருந்த போதிலும் உரிய நட்டத்தை பொறுப்பு வாய்ந்தவரிடமிருந்து அறவிட்டு புத்தங்களிலிருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2007 சனவரி 27 ஆந் திகதி வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக ரூபா 254,038 நட்டத்தை எதிர்காலத்தில் புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | நட்டத்திற்குரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) றிச்மன்ட் மாளிகையை பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் மற்றும் மாளிகையின் பின்பக்கத்தில் அலங்கார வடிவங்களை பார்வையிடுவதற்கு வருகை தருபவர்களுக்கு விற்பனை செய்வதற்கு அச்சிடப்பட்டிருந்த ரூபா 1,306,250 பெறுமதியான டிக்கட் புத்தகங்கள், முறையாக ஆவணங்களில் உள்ளடக்கப்படாமல் பாதுகாப்பின்றி குவித்து வைக்கப்பட்டிருந்தது. | தற்போது டிக்கட் புத்தகங்களின் விலைகள் மாறுபட்டுள்ளமையினால் உரிய டிக்கட் புத்தகங்களின் அளவு பிரதான அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று பயன்படுத்தக்கூடிய முறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | டிக்கட் புத்தகங்களை முறையாக பதிவேடுகளுக்கு கொண்டு வந்து பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறுவர் இல்லங்கள், றிச்மன்ட் பார்க் தோட்டம் மற்றும் றிச்மன்ட் மாளிகையில் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வின் மூலம் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கும் பொருள் பதிவேட்டு புத்தகங்களின் மீதிகளை நாளது வரையாக்குவதற்கும் பங்களாவில் முச்சக்கர வண்டிகளை உள்ளடக்கி சில பொருட்கள் புத்தங்களில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சிறுவர் இல்லத்தின் விளையாட்டு பொருள் இருப்பை உள்ளடக்கி புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் பௌதீக ரீதியில் காணப்படாத பொருட்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பொருள் மெய்மையாய்வு மூலம் வழங்கப்பட்ட பரிந்துரை அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்குக் கிடைக்கின்ற வெளிநாட்டு இழப்பீட்டுப் பணம் தொடர்பாக முறையான தகவல் முறைமை ஒன்று செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணம் தொடர்பான சரியான காலப் பகுப்பாய்வு மற்றும் தங்கியிருப்பவர்களிடம் இருந்து கிடைக்கின்ற கொடுப்பனவு குறிப்புக்களுக்கான பதிவேடு ஒன்று நாளது வரையாக முறையான வகையில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணத்தை இனங்காண முடியாதிருந்தது. | வெளிநாட்டு இழப்பீட்டுப் பிரிவின் மூலம் 1983 ஆம் ஆண்டில் இருந்து வெளிநாட்டு இழப்பு பெறுவனவு தொடர்பாக சகல தகவல்களையும் குறிப்பிடுவதற்காக பதிவேட்டு புத்தகம் பேணிச் செல்லப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக வெளிநாட்டு இழப்பு தொடர்பாக சகல தகவல்களையும் உள்ளடக்கிய கணனி முறைமை ஒன்றும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | வெளிநாட்டு இழப்பீட்டுப் பணம் தொடர்பாக முறையான தகவல் முறைமை ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மரணமடைந்த 144 நபர்களுக்காக தங்கியிருப்பவர்கள் / சட்ட ரீதியான உரிமை உள்ளவர்களுக்கு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூபா 122,303,680 ஆக இருந்த போதிலும் இழப்பீட்டு நலனாளிகளை இனங்காணும் முறையான திட்ட முறைமை ஒன்று அறிக்கைத் திகதி வரையிலும் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | இனங்காண்பதற்கு முடியாது காணப்படுகின்ற வெளிநாட்டு இழப்பீட்டு நலனாளிகளின் பட்டியல் நிரல் ஒன்று பத்திரிகையில் அறிவித்தலில் பிரசுரித்து இனங்காண்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது ஒருவர் இனங்காணப்பட்டதுடன் அந்த இழப்பீட்டுத் தொகையை விடுவித்தல் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய இழப்பீட்டுப் பணம் தொடர்பாக பிரதேச செயலகம் ஊடாக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | உரிய இழப்பீட்டுப் பணத்தை சட்ட ரீதியான உரிமையாளர்களுக்கு தாமதம் இன்றி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 18 வயதைப் பூர்த்தி செய்யும் வரை நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பராயம் அடையாதவர்களின் 507 பேர்களுக்குரிய 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் காணப்பட்ட ரூபா 271,744,562 ஆன நிலையான வைப்புக்களில் 404 பேர்களின் பிறந்த திகதியை இனங்காண்பதற்கும், பிறந்த திகதியை இனங்காணக்கூடிய 18 வயதுக்கு மேற்பட்ட பராயமடையாதவர்கள் 21 பேர்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 687,012 ஆன இழப்பீட்டுப் பணம் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பராயமடையாதவர்களின் வைப்புக்கள் தொடர்பாக பரீட்சித்து 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களை இனங்கண்டு அதனை எழுத்து மூலம் அறிவித்து நிலையான வைப்பை விடுவிக்க முடியாதவர்களின் நிலையான வைப்பை விடுவிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அதற்காக வெளிநாட்டு இழப்பீட்டுப் பிரிவுக்குரிய கணனியில் பராயமடையாதவர்களின் வைப்புத் தொடர்பான பதிவேடு ஒன்று நாளது வரையாக்குவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலையான வைப்புத் தொடர்பான பதிவேடை | உரிய இழப்பீட்டுப் பணத்தை சட்ட ரீதியான உரிமையாளர்களுக்கு தாமதம் இன்றி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நாளது வரையாக பேணிச் செல்லப்படுகின்றது. | |
| (ஊ) | 1998 முதல் 2004 வரை செலுத்தப்படாத வெளிநாட்டு இழப்பீடாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 2,196,364 தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 539,090 ஆன இழப்பீட்டுப் பணம் சட்ட ரீதியான உரிமையாளர்களின் விபரங்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக செலுத்துவதற்கு முடியாதிருந்த போதிலும் அவற்றுக்குரிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும் அதற்குரிய கோவைகள் மற்றும் தகவல்களை நாளது வரையாக முறையான பிரகாரம் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தூதுவராலய பிரிவில் இருந்து இது தொடர்பான எழுத்து மூலம் விசாரித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். கோவைகளை நாளது வரையாக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கோவைகள் மற்றும் தகவல்களை நாளது வரையாக முறையான பிரகாரம் பேணிச் செல்வதற்கும், வெளிநாட்டு இழப்பீடு சட்ட ரீதியான உரிமையாளர்களுக்கு தாமதம் இன்றி செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | என்.டி.எஸ். சில்வா விஜேசிங்க மரணச் சொத்தாளரின் இறுதி விருப்ப பத்திரத்தின் பிரகாரம் றிச்மன்ட் பங்களா சிறுவர் வீடொன்றாக அமைப்பதற்கு இங்கிலாந்தின் பேராசிரியர் பேனாட் டொன்கே வீடுகளுக்கு இணங்கும் வகையில் மற்றும் உள்நாட்டு தரத்தில் பொருத்தமான வகையில் பேணிச் செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பங்களாவின் பின்பக்கத்தில் அமைந்துள்ள வேறொரு கட்டடம் ஒன்றில் 10 சிறுவர்களுக்கு குறைவான எண்ணிக்கையுடன் சிறுவர் இல்லம் பேணிச் செல்லப்பட்டமையால் தோட்டக்காரரின் பிரதான நோக்கம் போதியளவான பிரகாரம் | றிச்மன்ட் காசல் பங்களா உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாதாரிகளுக்கு திறக்கப்பட்ட இடமாக உள்ளதுடன் அதில் உள்ள அறைகள் சிறுவர்களுக்கு பாதுகாப்பு அற்றதாகும். மேலும் பங்களாவில் தற்போது பழுதுபார்த்தல் நடவடிக்கையில் காணப்படுகின்றமையால் சிறுவர்கள் அதில் தங்கியிருக்க முடியாதுள்ளது. தற்போது 10 சிறுவர்கள் மாத்திரம் தங்கி இருப்பதுடன் சில சிறுவர்கள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை முடிவடைந்து வீட்டில் இருந்து வெளியேறி உள்ளனர். 24 | இறுதி விருப்ப பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தோட்டக் காரர்களின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் சிறுவர் இல்லம் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் நிருவாக சபைக் கூட்டத்தில் உரிய பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் வீட்டுக்குரிய தீர்மானம் எடுத்தல் நலிவாக காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. | மாவட்ட செயலகங்களின் மூலம் விண்ணப்பங்கள் கோரி சிறுவர்களைச் சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | டீ.எஸ்.டபிள்யூ. சமரக்கோன் மரணச் சொத்துக்குரிய சைமன் டெல்வத்த காணியில் அரசாங்கத்தில் கையேற்கப்பட்ட 16 ஏக்கர் 01 றூட் 35 பேர்ச் க்காக தீர்மானிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை இரண்டு சந்தர்ப்பங்களின் போது முறையே ரூபா 2.63 மில்லியன் மற்றும் ரூபா 1.79 மில்லியன் ஆக 02 பெறுமதிகள் கெஸ்பாவ பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் உரிய வேறுபாடுகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கம் பெற்ற காணியில் ஆரம்ப நில வரைபடம் 8043 என்ற பகுதி கிராமத்தை விரிவு படுத்தலின் கீழ் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு கையளிப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணிப்பகுதி ஆகும். ஏனைய காணிப்பகுதிக்காக இழப்பீடு மற்றும் அதற்கான வட்டி பெறப்பட்டுள்ளது. வரைபட இலக்கம் 8043 என்ற பகுதிக்காக குறித்துரைத்த இழப்பீட்டுத் தொகை மற்றும் வட்டி தொடர்பாகவும், இழப்பீட்டுத் தொகை வேறுபாடு தொடர்பாக கெஸ்பாவ பிரதேச செயலகத்தில் விசாரணை செய்யப்பட்டுள்ளது. இந்த வேறுபாட்டை தீர்த்து வைப்பதற்கு பிரதேச செயலாளர் மிகுதி சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாகவும் இந்த திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டுப் பணம் தொடர்பாகவும் 2023.03.17 ஆந் திகதி மீண்டும் விசாரணை செய்யப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்ட மரணச் சொத்துக் காணிகளுக்கு உரிய இழப்பீட்டுப் பணம் மற்றும் வட்டிப் பணம் மரண சொத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2013 ஆம் ஆண்டு வரை சரியான வகையில் முகாமைத்துவம் செய்யாமையின் காரணமாக வீரசிங்க அபேய நாயக்க மரணச் சொத்துக்குரிய மாத்தறை களஞ்சிய வீதியில் 32 பேர்ச் அளவான காணி மற்றும் கட்டிடத்தில் அனுமதி அற்ற வகையில் குடியிருக்கின்றவரை அகற்றுவதற்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆதனங்களை விற்று நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் ஆதனத்தை விற்கும் வரை தற்காலிகமாக வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளமை கோவையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. பின்னர் அனுமதியற்ற குடியிருப்பாளரின் காரணமாக அவரை அகற்றுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையால் இதுவரை ஆதனத்தை விற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் 2023 யூலை 04 ஆந் திகதி வழக்கு கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | விற்பனைக்காக நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் காணி மற்றும் கட்டிடத்தை விற்று மரணச் சொத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | நுகேகொட பிரதேசத்தில் குடியிருக்கின்ற மரணச் சொத்தாளரின் மரணச் சொத்து தொடர்பாக பொது நம்பிக்கை பொறுப்பிற்கு உரித்தில்லாதிருந்த போதிலும் அதற்காக தொடரப்பட்ட வழக்கிற்கு உரிய சட்டத்தரனி கட்டணமாக கூட்டுமொத்தமாக ரூபா 2,962,430 செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் சட்டத்தரணி கட்டணம் செலுத்த வேண்டிக் காணப்பட்டது. | இந்த மரணச் சொத்தின் மூலம் நோக்கத்தை நிறைவேற்றுதல் 2022 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மனைவியின் ஆதனங்களுக்காக மரச் சொத்துக்கான உரிமையின் பிரகாரம் திணைக்களத்தால் இழப்பீட்டிற்காக கோரப்பட்டு இழப்பீட்டை பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்காக இன்னுமொரு தரப்பினரால் உரிமை கோரப்பட்டமையால் பிரதேச செயலாளரால் பொது நம்பிக்கைப் பொறுப்பு தரப்பினருக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் பொது நம்பிக்கைப் | திணைக்களத்திற்கு சட்ட ரீதியான உரித்துள்ள ஆதனங்கள் தொடர்பாக மாத்திரம் வழக்கு நடவடிக்கைகளைத் தொடர்புபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பொறுப்பாளருக்கு இழப்பீட்டிற்காக உரித்து இழக்கப்பட்டிருக்குமாயின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்காக தோற்றியிருந்த சட்டத்தரணி அவர்களுக்கு தொழிற்கட்டணத்தில் ஒரு பகுதி செலுத்தப்பட்டுள்ளது. செலுத்தப்படாத தொழில் கட்டணமும் காணப்படுகின்றது. | |
| (ஓ) | ஹெரி ஹப்புகொட மரணச் சொத்தின் இறுதி விருப்ப பத்திரத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் போதும் மரணச் சொத்தின் வருமானத்தின் 1/5 சேமிக்கப்பட்டு அந்த சேமிப்பு ரூபா 100,000 ஆன விடத்து அது மாணவர் உதவி தொகையைக் கையளிப்பதற்கு மற்றும் இடர் நிலைமைகளின் போது உதவியினை வழங்குவதற்கும் வைக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தால் பல வருட காலம் முதல் வருமானங்கள் சேமிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மரணச் சொத்தில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 9,564,983 ஆக இருந்ததுடன் அதில் சேமிக்க வேண்டியிருந்த போதிலும் சேமிக்கப்படாத தொகை ரூபா 1,912,997 ஆகும். உரிய முகாமைத்துவத்தை உடைய தோட்ட நிருவாகம் மேற்கொள்ளாமையின் காரணமாக வரவு மீதி ஏற்பட்டதன் காரணமாக மரண சொத்திற்குரிய நோக்கங்கள் | ஹெரி ஹப்புகொட மரணச் சொத்திற்குரிய தோட்டங்களின் வரவு மீதி காணப்படுகின்றமையால் வருமானத்தில் 1/5 சேமிக்கப்பட்டு நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியுமாக இருக்கவில்லை. எதிர்காலத்தில் தோட்டங்களை இலாபகரமான அடிப்படையில் நடாத்திச் செல்வதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | இறுதி விருப்ப பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஔ) | திறக்கப்படாத இறுதி விருப்பப் பத்திரங்கள் 54 ஐ திறத்தல் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளுக்காக மரணச் சொத்தானர்களின் நிதியத்தைப் பயன்படுத்தி ரூபா 2,629,250 செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த மரணச் சொத்துக்குரியதாக நிறைவேற்ற வேண்டிய பணிகள் மரணச் சொத்தாளர்களின் தமது இறுதி விருப்ப பத்திரத்தில் குறித்துரைத்தவாறு குறிப்பிடப்பட்டமையினால் இந்த செலவினங்களை செய்தல் மரணச் சொத்தாளர்களின் நோக்கங்களுக்கு முரணாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | நீதிமன்ற பணிகள் முடிவடையும் போது இறுதி விருப்பப்பத்திரங்களில் உள்ள ஆதனங்களில் மீளளிப்பு செய்யும் அடிப்படையில் பொது பொறுப்பாளரின் விருப்பத்தின் பிரகாரம் உரிய மரண சொத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு இதுவரை முடிவடைந்திருக்கவில்லை. | மரணச் சொத்தாளர்களின் இறுதி விருப்பப்பத்திரங்களில் குறித்துரைத்தவாறு குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மாத்திரம் மரணச் சொத்துக்களை பயன்படுத்துதல் வேண்டும். |
| (க) | நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக்களுக்குரிய பிரிவுகளில் தனித்தனியாக நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்வதற்கும், உரிய நிலையான சொத்துக்களில் பெறுமானத் தேய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனித்தனியாக நிலையான சொத்துப் பதிவேடு தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக்களுக்குரிய நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு தொடர்பாக பரிந்துரை சமர்ப்பிப்பதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த பரிந்துரையின் அடிப்படையில் எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக்களுக்குரிய பிரிவுகளில் தனித்தனியாக நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்வதற்கும், நிலையான சொத்துக்களில் பெறுமானத் தேய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | 1973 இன் 28 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்தித்தாள் கம்பனியின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் லேக்ஹவுஸ் நிறுவனம் அரசாங்கத்திற்கு கையேற்கும் போது அரசாங்கத்திற்கான பங்குகளை இடுவதற்காக பொது நம்பிக்கை பொறுப்பாளரின் பெயர் குறிப்பிடப்பட்டதுடன் அரசாங்கத்திற்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் அந்தக் கம்பனியின் சாதாரண பங்குகள் 3,050,379 அதாவது 87.5 சதவீத உரிமைத் தன்மை பெறப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பாகவும் அதன் அடிப்படையில் உழைக்கப்படுகின்ற இலாபப் பங்கு தொடர்பாகவும் திணைக்களத்தின் நம்பிக்கை பொறுப்பு / மரணச் சொத்து கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப்பு / மரணச் சொத்துக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | திறைசேரியின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற புராதன பெறுமதி உடைய களுத்துறை பளாத்தொட்டையில் அமைந்துள்ள றிச்மன் காசல் கட்டிடம், உரிய காலத்தில் முறையான பிரகாரம் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பழுது பார்த்தல் மேற்கொள்ளாமையின் காரணமாக கூரையில் நீர் கசிந்து சுவர்களில் பாதிப்பு ஏற்பட்டிருந்ததுடன் சில இடங்களில் புராதன அடையாளங்கள் தெரியாத வகையில் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மீண்டும் பழுது பார்த்தல் ஒன்றை | நிதியத்தை வழங்கிக் கொள்வதற்கு முடியாமையின் அடிப்படையில் உரிய திணைக்களம் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. எனினும் உரிய பழுது பார்த்தல்கள் தொடர்பாக தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கை இராணுவத்தின் ஊழியப் பங்களிப்பைப் பயன்படுத்தி தொல்பொருளியல் அதிகார தரப்பினரின் மேற்பார்வையின் கீழ் எதிர்வரும் சில ஆண்டுகளின் ஆரம்ப நவீனமயப்படுத்தல் | மாளிகையின் புராதன தன்மையினை பாதுகாக்கும் வகையில் விரைவாக பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளவதற்காக 2023 ஆகஸ்ட் மாதத்தின் போது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் தர அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிதியத்தை வழங்குவற்கு முடியாமையின் அடிப்படையில் பழுது பார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் தொடர்ந்தும் மாளிகையில் பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. | நடவடிக்கைகள் புராதன பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (கீ) | றிச்மன் மாளிகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர மற்றும் அத்தியவசிய பழுது பார்த்தல்களுக்காக 2021 ஆம் ஆண்டின் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்குப் புறம்பாக ரூபா 755,335 செலவிட்டு அதில் ரூபா 3,000 தொகை மாத்திரம் நிறுத்தி வைத்தல் பணமாக கழிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் நீர் கசிவு ஏற்பட்டு கூரை மற்றும் சுவர்களில் பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்ததுடன் பின்னர் மதிப்பீடு ஒன்று தயாரிக்காமல் விடயப் பொறுப்பு எழுதுவினைஞரால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலையின் அடிப்படையில் பொருட்களுக்காக ரூபா 185,665 மற்றும் கூலிக்காக ரூபா 722,105 செலவில் மாளிகையின் பின் பக்க சுவர்களில் மாத்திரம் 12,122 அடி அளவில் உரிய திட்ட முறைமை இன்றி இடை இடையே வர்ணம் பூசப்பட்டிருந்தது. | நிதியத்தை உடனடியாக வழங்குவதில் வசதியீனமாக இருக்கும் போது ஏற்பட்டிருந்ததை கவனத்தில் கொள்ளும் போது அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆரம்ப நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் இராணுவத்தின் பங்களிப்பைப் பெற்று மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய நிர்வாக உத்தியோகத்தருடன் கலந்துரையாடி உரிய நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் தொல்பொருளியல் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் முறையான வகையில் பல படிமுறைகளுக்கு ஒதுக்கப்பட்டு பொருத்தமான மற்றம் வெளிப்படையான பெறுகை திட்டத்தை பயன்படுத்தி இந்த புராதன கட்டிடத்தின் அடையாளங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொண்டு சுற்றுலா பிரயாணிகளை கவர்ச்சிகரமாக்குவதை | பழுதுபார்த்தல் மேற்கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க வெளிப்படையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகரிக்கும் வகையில் நிர்மானித்து உயர்ந்த வருமானத்தை உழைத்துக் கொள்வதற்காக முறையான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |
| (கு) | 2020 ஆம் ஆண்டின் போது ஹொரண தோப் வத்தையில் காணப்பட்ட 06 ஏக்கர் இறப்பர் பயிர்ச் செய்கை அகற்றப்பட்டு தெங்கு பயிரிடுவதற்காக ரூபா 247,272 செலவினத்தில் நிலத்தை தயாரித்த பின்னர் அந்த நிலத்தை உள்ளடக்கிய 10.592 ஏக்கர் 2021 ஆம் ஆண்டில் இருந்து தனியார் நிர்மாண நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | இந்த தோப் வத்த அமைந்துள்ள காணிக்கு அருகில் விரைவாக நகர மயமாக்கப்படுவதுடன் பயிர் செய்கைகள் மேற்கொண்டு அதில் பாதுகாக்கும் வேலை அதிக காலத்தில் வருமானம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பாக்கப்படும் அடிப்படையில் வழங்கி அதிக நலன்களைப் பெறக்கூடிய வகையில் கருத்தில் கொண்டு முன்னாள் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அதற்கான அற்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | சரியான தீர்மானம் எடுக்க வேண்டியிருந்ததுடன் இந்த பணிகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் ஆக்கபூர்வமான இருத்தல் வேண்டும். அவ்வாறே முகாமைத்துவத்தால் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (கூ) | றிச்மன் பார்க் வத்தையில் அமைந்துள்ள 03 ஏக்கர் இறப்பர் பயிர்ச் செய்கையை அகற்றுவதற்கும் கிடைக்கின்ற வருமானத்தில் கறுவா பயிரிடுவதற்கும் முன்மொழியப்பட்டு பின்னர் கறுவா பயர்ச் செய்கை மேற்கொள்ளப்படாமல் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்த பின்னர் தென்னங்கன்றுகள் ரூபா 678,700 செலவினத்தில் 07 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்து பயர்ச் செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் | இறப்பர் பயிர்ச் செய்கையை அகற்றியதன் பின்னர் சிறிது காலம் மண்ணை மீட்டெடுப்பதற்காக காணப்பட வேண்டி இருந்ததுடன் மண்ணைத் தயாரித்த பின்னர் பயிரிடுவதற்காக சிறிது காலம் எடுத்தல் பொதுவான சம்பிரதாயம் ஆகும். கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் காணப்பட்ட எரிபொருள் நெருக்கடியின் அடிப்படையில் அலுவலக நடவடிக்கைகள் | அதிக நலன்களைப் பெறுகின்ற முறையில் பயிர்ச் செய்கைகளை முறையான பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கப்பெற்ற 260 தென்னங் கன்றுகளில் 28 கன்றுகள் மாத்திரம் எஞ்சியிருந்தமையால் அந்த பயிர்ச் செய்கைகள் வெற்றிகரத்தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் இறப்பர் பயிர்ச் செய்கையை அகற்றுவதற்காக ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதமான 90 நாட்களுக்காக நாளொன்று ரூபா 1,000 வீதம் அறவிட வேண்டிய ரூபா 90,000 தாமத கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வீழ்ச்சியடைந்ததன் காரணமாக ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் பிரகாரம் அதிக காலத்ததை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| (கெ) | புராதன பெறுமதி உடைய நூதன பொருட்கள் , றிச்மன் மாளிகையில் வைப்புச் செய்யப்பட்டு பாதுகாக்க வேண்டியிருந்ததாக மரண சொத்தாளரின் இறுதி விருப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனிடையே நூதன பொருட்கள் சில மாத்திரம் திணைக்களத்தின் காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்தமையும் ஏனைய நூதன பொருட்கள் காணப்படுகின்ற இடங்கள் தொடர்பாக கண்டறிவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். | மரணச் சொத்தாளரின் இறுதி விருப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட வகையில் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (கே) | ஐ.டபிள்யூ.சீ. விஜேரட்ன மரண சொத்துக்குரிய நோட்டன் பிறீச்ட் ஹில் அமைந்துள்ள வீடு மற்றும் காணி 1993 திசெம்பர் 07 ஆந் திகதி முதியோர் இல்லத்தைப் பேணிச் செல்வதற்காக கினிகத்ஹேன பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்களை கையளித்தல், பராமரித்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கி | கினிகத்ஹேன பிரதேச செயலாளரின் தலைமையில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் முதியோர் இல்லத்தைப் பேணிச் செல்வதற்கும் உரிய பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளராக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டுள நம்பிக்கை பொறுப்பை | வெளித்தரப்பினருக்கு மரண சொத்துக்கள் வாடகை அடிப்படையில் வழங்கும் போது முறையான வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | ஸ்தாபிப்புக்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (கை) | சீ.ஈ. வணிகசூரிய மரணச் சொத்துக்குரிய ஆதனங்கள் விற்பனை மரணச் சொத்தாளரின் பெயரில் நம்பிக்கைப் பொறுப்பு ஒன்று ஸ்தாபிப்பதற்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு 2005 ஆம் ஆண்டின் போது இறுதி விருப்ப பத்திரம் கிடைத்திருந்த போதிலும் சில காணிப் பகுதிகள் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்ட கட்டிடங்களின் உரிமைத் தன்மையினை இனங்கண்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரித்தை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்பதற்கும் இந்த ஆதனங்கள் விற்பனை செய்து மரணச் சொத்தாளரின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இறுதி விருப்பப் பத்திரத்தின் பிரகாரம் சீ.ஈ. வணிகசூரிய மரணச் சொத்துக்குரிய சில ஆதனங்கள் (சேதவத்த 220/3 காணி, வெள்ளவத்தை ஸ்டேசன் வீதியில் இலக்கம் 27, 29 என்ற ஆதனம்) உரிய பிரகாரம் இனங்கண்டு அந்த ஆதனங்களை விற்பனை செய்து சீ.ஈ. வணிகசூரிய நம்பிக்கை பொறுப்பின் பேரில் வைப்புச் செய்து உரிய நோக்கம் நிறைவேற்றப்படுகின்றது. கடவத்தை, நிரிஸ்பெரவத்த பெயருடைய ஆதனங்களும் நீதிமன்றக் கட்டளையின் மூலம் அரச பாதுகாப்பு அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. ஏனைய ஆதனங்களுக்காக சீ.ஈ. வணிகசூரிய அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாத பங்குகள் உரிமைத் தன்மை இருந்தமையால் உரிய உரிமைத்தன்மையை இனங்காணல் வேண்டும். அவ்வாறு பகிர்ந்தளிக்கப்படாத சொத்துக்களில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் இருக்கின்றமையினால் உரிய நீதிமன்ற நடவடிக்கைகளை எடுத்து தீர்த்து வைக்க வேண்டியுள்ளது. | உரிய காணிகள் மற்றும் கட்டிடங்களை இனங்கண்டு பொது நம்பிக்கை பொறுப்பாளரின் உறுதிப்படுத்தி மரணச் சொத்தாளரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் உள்ளளக் கணக்காய்வுப் பிரிவினால் மீளாய்வாண்டிற்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கு இடையே 15 ஐயவினாக்களுக்காக முகாமைத்துவத்தால் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக தாமதம் இன்றி பதிலளிக்கப்படல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய இலக்கம் 18/2001 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றிய சகல உத்தியோகத்தர்களும் வேறொரு சேவை நிலையத்தில் சேவையாற்றுவதற்கு இடமளிப்பதற்காக இடமாற்றங்கள் வழங்க வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தில் 05 வருடங்களை விஞ்சிய 22 உத்தியோகத்தர்களுக்காக இடம் மாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த இடமாற்றங்களின் போது 05 வருடங்களுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களின் தகவல்களை உள்ளடக்கி படிவங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன் இதுவரை இடம்மாற்றம் கிடைக்காத உத்தியோகத்தர்களும் இருக்கின்றனர் என்பதை அறியத்தருகின்றோம். | அரச நிர்வாக அமைச்சுடன் தொடர்பினை ஏற்படுத்தி நீண்ட காலம் முதல் நிறுவனத்தில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்காக இடம் மாற்றங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |